
GNANA BHAKTAMITRAN
Pastor and Evangelist
Evangelical Bible Assembly
Madurai, India







# இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷம்
# பாடம் - 2

வேதாகமத்தில் என்ன இருக்கிறது என்பதைக் குறித்த முகவுரையை நாம் முந்தின பாடத்தில் படித்தோம். வேதாகமத்தின் மூலமாக கடவுள் உலகத்தாருக்கு ஒரு அறிவிப்பை தெரியப்படுத்துகிறார் என்பதை நான் உங்களுக்குச் சொன்னேன். நிரந்தரமாக வாழக்கூடிய ஒரு மகத்தான வாய்ப்பு மனிதகுலத்தாருக்கு இருக்கிறது என்பதையும், கடவுளின் மகிமையான ராஜ்ஜியத்தின் பிரஜையாகக்கூடிய வாய்ப்பு மனுக்குலத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அந்த அரிய வாய்ப்பு அவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படவிருக்கிறது என்பதையும்,கடவுள் இந்த வேதாகமத்தின் மூலமாக மனிதகுலத்திற்கு அறிவித்திருக்கிறார். அப்பாதையை படிப்படியாகக் கீழ்ப்படிய கீழ்ப்படிய தெளிவுபடுத்திக் கொண்டே போகிறார். ஏதாவது ஒரு படியில் கீழ்ப்படியாவிட்டால் அடுத்த படி தொரியாமல் போய்விட்டு, செத்த சபைகளாக செயல்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட சபைகளைத்தான் சாத்தான் முழுங்கிவிடுகிறது என்று போன பாடத்தில் சொன்னேன். மனிதன் செய்யக்கூடிய அந்த சிறிய ஆரம்ப முயற்சிகளுக்குக்கூட கடவுள் பலம் அளிக்கிறவராக இருக்கிறார். அவரையே நம்பி, அந்த வாய்ப்பைப் பெறவேண்டும் என மிகவும் ஆவலோடு இருக்கிறவனுக்கு அவர் பெலன் தருகிறார்.

சத்தியத்தை தொடர்ந்து தேடுகின்ற உண்மையான மனிதர்களை கடவுளும் தேடிக் கொண்டே இருக்கிறார். சாத்தானின் பிடியில் இருந்தும், அசுத்த காரியங்களினால் கொடிய விஷமாகிப்போன இந்த உலகத்தின் பிடியில் இருந்தும் தப்புவிப்பதற்காக அவர், அப்படிப்பட்டவர்களை தேடிக் கொண்டிருக்கிறார். இவ்வுலகில் பிறந்தவர்கள் யாரும் கடவுளை அறிந்து கொண்டவர்களாகப் பிறப்பதில்லை. உண்மையான கடவுளை அறிந்து கொள்ள வேண்டும் என்பது ஒருவனுக்கு திடீரென்று ஏற்பட்டுவிடுவதுமில்லை. கொஞ்சங்கொஞ்சமாக அந்த ஆவல் அவனுக்குள் எழுகிறது. அது எப்படி ஏற்படுகிறதென்பது ஆளுக்கு ஆள் வித்தியாசப்படலாம். சிலபேருக்கு அந்த ஆவல் விரைவாக ஏற்படுகிறது. சிலருக்கு அது மெதுவாக ஆனால் சீராக ஏற்படுகிறது.

கடவுள் தன்னை அவனுக்கு வெளிப்படுத்துவதை அவன் உணர்ந்தானென்றால், அவன் உடனடியாக அந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், அவன் கடவுளைப் பற்றி அறிந்து கொள்வது சாத்தானுக்குப் பிடிக்காதாகையால், எவ்வகையிலாவது அந்த எண்ணத்தை அவனிடமிருந்து அகற்றிவிடவே சாத்தான் முயற்சி செய்யும். கடவுளைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவல், ஒவ்வொரு மனிதஆத்துமாவிலும் ஒரு சிறு பொறியாக பதிக்கப்பட்டுள்ளது. அந்த பொறியை உபயோகித்து, ஒவ்வொரு மனிதனும் மெய்யான கடவுளை

அறிந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இதில் பெரும்பாலானோர் தோற்றுப் போகிறார்கள். அதற்குக் காரணம், சாத்தான் அவர்களுடைய மாமிசஇயல்பையே உபயோகித்து அவர்களுடைய கவனத்தை திசைதிருப்பி விடுவதாலேயாகும். இதைக் குறித்து வேதாகமும் கூறுவதாவது: **மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. . . இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது** கலாத் 51:7. ஆகவேதான் ஆவிக்குரிய காரியங்களில் கவனத்தை செலுத்தாதபடிக்கு மனிதனின் கவனம் திசைதிருப்பப்பட்டுவிடுகிறது.

ஒரு உண்மையான கிறிஸ்தவ பெற்றோருக்கு பிறக்கும் குழந்தைகள்கூட பிறப்பினால் (கடவுள் பார்வையில்) கிறிஸ்தவனாக ஆகிவிடுவதில்லை. மற்ற எல்லா மதங்களிலுமே பிறந்த குழந்தை அந்த மதத்தை தழுவினதாக இருக்கிறது. உதாரணமாக இந்து, முஸ்லீம், யூத பெற்றோரின் குழந்தைகள் அந்தந்த சமயத்தவராக இருக்கிறார்கள். ஆனால், வேதாகமத்தின்படி, பிறப்பினால் யாருமே கடவுளின் பிள்ளைகளாகப் பிறப்பதில்லை. அவருடைய ஞானத்தின்படி, யாருக்குமே அந்தவிதமான சிலாக்கியம் கொடுக்கப்படவில்லை. உலகில் ஒவ்வொருவரும் வெவ்வேறுவிதமான கஷ்டங்களோடும் தொந்தரவுகளோடுந்தான் பிறக்கிறார்கள். அதிக கஷ்டமுள்ளவனுக்கு கடவுளுடைய கிருபையும் அதிகமாக இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது எல்லாருக்குமே ஏறக்குறைய ஒரே அளவிலான வாய்ப்புகளும், தொந்தரவுகளுந்தான் ஏற்படுகிறது. சிலபேர் மிகவும் அதிகமாக கஷ்டப்பட வேண்டியதாயிருந்தாலும், அது கடவுளின் அனுமதியில்லாமல் நடந்துவிடுவதில்லை. அதெல்லாம் கடவுளின் பரந்த ஞானத்திற்குட்பட்டது. அவைகளை பூரணமாக அறிந்து கொள்ளும் அளவுக்கு நமக்கு ஞானம் போதாது. இந்த சந்தர்ப்பத்தில் ஆத்துமா என்றால் என்ன என்பதையும் நாம் அறிந்து கொள்ளவது அவசியமாகிறது.

## மனிதனின் ஆத்துமா

மனிதனில் மூன்று பாகங்கள் உள்ளன. 1) அழிந்து போகக்கூடிய சரீரம் 2)அழியாத ஆத்துமா 3)அழியாத ஆவி. கடவுள் நியமித்திருக்கும் காலம் வரைக்கும் இந்த உலகத்தில் வாழ்வதற்கென்று மனிதனுக்கு ஒரு சரீரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவன் கடவுளைத் தேடவும், அழிவில்லாத ஒரு நிலையைத் தனக்கு ஏற்படுத்திக் கொள்ளவும் அவனுக்கு ஆவியும் ஆத்துமாவும் கொடுக்கப்பட்டுள்ளது. சரீரத்தின் பெலன் மிகவும் கொஞ்சமே. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே அதால் வாழ இயலும். ஒரு ராக்கெட்டை ஆகாயத்தில் செலுத்துவதற்கு அதன் அடிப்பாகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் விண்கலம் போன்றதே சரீரம். அந்த ராக்கெட்டை மிகுந்த விசையோடு ஆகாயத்தில் தள்ளிவிட்ட பிற்பாடு, அது ராக்கெட்டில் இருந்து கழன்று விழுந்து எரிந்து சாம்பலாகிவிடுகிறது. அதனுடைய வேலை அவ்வளவே. மனிதனைப் பொறுத்த வகையில் அவன் இந்த உலகில் வாழும் வரைக்கும் அவன் சரீரம் அவனுக்கு அவசியமானது. ஆனால் அவன் இறந்து போனதும் அவனுடைய சரீரம் பிரயோஜனமற்றதாகிவிடுகிறது. ஆகவே அது அழிந்து போகிறது.

ஆனால், அப்படியாக அவனுடைய சரீரமானது அழிவதற்கு முன்னால், ஆவிக்கும்

ஆத்துமாவுக்கும் மிகவும் முக்கியமான வேலை இருக்கிறது. சாத்தானாலும் அதன் தூதர்களாலும் சின்னாபின்னமாக்கப்பட்டுவிட்ட இந்த உலகத்தில் இருந்து கொண்டே அவை கடவுளைத் தேட வேண்டியதாயிருக்கிறது. அவன் மரணம் அடைவதற்கு முன்னால் இதை செய்து முடிக்க வேண்டுமென்பது கடவுளின் திட்டமாயிருக்கிறது. ஒருவன் உண்மையாகவே கடவுளைத் தேடினானென்றால், கடவுளின் பலத்தினால் அவன் அழிவில்லாத நிலையை அடைவான். ஒரு மனிதன் அடையக்கூடிய மிகப்பெரிய நிலமை, அவனுடைய ஆத்துமா கடவுளைக் கண்டுகொள்வதும், அவருடைய உதவியினால் அவன் அழிவில்லாத நிலையைப் பெறுவதும்தான்.

## கிறிஸ்துவின் சுவிசேஷம்

வேதாகமம் ஒன்றின் மூலமாகத்தான் உலகில் பிறந்த ஒவ்வொருவரும் மகத்தானதொரு பெரிய காரியத்தை அறிந்து கொள்ள முடியும். அந்த காரியம் யாதென்றால் ஒருவன் எப்படி அழியாமையை அடைய முடியும் என்பதேயாகும்.

நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்காக அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்:

1. மனிதகுலம் முழுவதுமே கறைபட்டுப் போயிற்று. பாவநிலையை அடைந்துவிட்டது. அதன்காரணமாக அவர்கள் தங்களை சிருஷ்டித்த கடவுளிடமிருந்து வெகுதூரம் வழிவிலகிப் போய்விட்டார்கள். இந்த நிலையப் பற்றி வசனம் கூறுவதாவது: **. . எல்லோரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி . . .** ரோம 3:23.

2. கடவுளை நெருங்குவதற்கு பெரிதும் தடையாக இருப்பது, சாத்தான்/பிசாசு ஆகும்

3. மனிதனுடைய விவகாரங்களில் சாத்தான் புகுந்து குழப்புவதை கடவுள் தடை செய்வதில்லை. ஏனென்றால் அவர் சாத்தானையே உபயோகித்து, மனிதன் கடவுளைத் தேர்ந்தெடுக்கிறானா அல்லது சாத்தானிடம் இருப்பதை விரும்புகிறானா என்பதை சோதித்தறிகிறார்.

4. சாத்தானையும், அதன் தூதர்களையும், உலகத்தையும் அழித்துவிட கடவுள் ஏற்கனவே தீர்மானம் செய்துவிட்டார்.

5. அதே சமயத்தில் அவர் தன்னுடைய திட்டங்களையும் வேதாகமத்தின் மூலமாக மனிதனுக்கு அறிவித்தும்விட்டார். மனிதகுலத்தின் மீது அவருக்கு இருக்கும் உண்மையான அன்பு, வேதாகமத்தின்படி நடந்து அவரைப் பின்பற்றி வருகிறவர்களுக்காக அவர் ஆயத்தம் பண்ணி வைத்திருக்கும் மகிமையான இடம் இவைகளையெல்லாம் வேதாகமத்தின் மூலமாக அவர் மனிதர்களுக்குத் தெரிவித்துவிட்டார்.

6. மனிதன் இரட்சிப்படைய கடவுளின் திட்டம். கீழ்காண்பவைகளைக் குறித்து சிந்திக்கலாம்

- கடவுளின் மனித அவதாரம்
- அவருடைய திருப்பாடுகள், தெய்வீக இரத்தம் சிந்தி, மனிதருடைய பாவம் போக்கும்பொருட்டு தன்னை பலியாக ஒப்புக் கொடுத்தது
- அவர் மரித்து அடக்கம் செய்யப்பட்டது
- மூன்றாம் நாள் அவருடைய உயிர்த்தெழுதல்
- இரு வகையான திட்டமும் நிறைவேறுதல் } இஸ்ரேலுடைய இரட்சிப்பு; புறஜாதியாரின் இரட்சிப்பு
- அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து வேதம் பலமாக ரூபிக்கிறது. அவைகளையும் தவிர வேறு பல சான்றுகளும் உள்ளன
- அப்போஸ்தலரின் ஊழியம்
- சபையின் ஊழியம்
- கடவுளின் அன்பின் ஊழியம்